பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
09 08 2026 SUNDAY 6 45 AM
<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

2. சமூக மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே கூறியுள்ளார்.

3. நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை விவகாரத்தில், தமிழகத்தின் நிலைப்பாட்டை உறுதி செய்யும் வகையில், அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. நிதி நெருக்கடியை காரணம் காட்டி, மக்களுக்கு பலனளிக்கும் திட்டங்களை மாநில அரசு கைவிடுவது ஏற்புடையதல்ல என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

5. உலக இளையோர் Bridge சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sagnik Roy - Sayantan Kushari இணை சாம்பியன் பட்டம் வென்றது.

>>>>>>><<<<<<<

மருத்துவ உபகரணங்கள் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், உள்நாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன தொழில்நுட்பம் அடிப்படையிலான மருத்துவ உபகரணங்கள் மூலம், குறைந்த செலவில் அனைவருக்கும் சுகாதார வசதிகள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.

>>>>>>><<<<<<<

சமூக மேம்பாட்டை உறுதி செய்யும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் திரு. ராம்தாஸ் அத்வாலே தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், சமூக பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியினருக்கான டாக்டர் அம்பேத்கர் தேசிய

நிவாரணத் திட்டம், மத்திய அரசின் நிதியுதவி திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இத்திட்டத்தின் கீழ், சமூக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான 9 கோடி ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>>>>><<<<<<<

தொகுதி மறுவரையறை விவகாரத்தில், தமிழகத்தின் நிலைப்பாட்டை உறுதி செய்யும் வகையில், அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

நாடாளுமன்ற தொகுதிகள் தற்போதுள்ள எண்ணிக்கையிலேயே தொடரவும், தமிழகத்தின் உரிமைகளை நாடாளுமன்றத்தில் எடுத்துரைக்கும் வகையில், உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>><<<<<<<

காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், தாராபுரம் பகுதியில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகள் விரைவில் சீர் செய்யப்படும் என்று மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி நீர் விவகாரத்தில் நிரந்தர தீர்வு காண தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

தாராபுரம், காங்கேயம் பகுதிகளில் நிலஉச்சவரம்பு சீர்திருத்த நடவடிக்கையின் பேரில், தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள 5 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான தரிசு நிலங்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் நெசவாளர்களுக்கு சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

முன்னதாக, தாராபுரத்தைச் சேர்ந்த 61 பயனாளிகளுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டாக்களை திரு. கே.ஏ. செங்கோட்டையன் வழங்கினார்.

*>>>>>>><<<<<<<*

*தமிழக மக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை மாநில அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.*

*நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில், தேர்வு செய்யப்பட்ட 273 பேருக்கு அவர் பணிநியமன ஆணைகளை வழங்கிப் பேசினார்.*

*இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது அரசின் கடமை என்று அவர் குறிப்பிட்டார்.*

*இதனைக் கருத்தில் கொண்டு பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்க, அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.*

*செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களில் இளைஞர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.*

*>>>>>>><<<<<<<*

*நிதி நெருக்கடியை காரணம் காட்டி, மக்களுக்கு பலனளிக்கும் திட்டங்களை மாநில அரசு கைவிடுவது ஏற்புடையதல்ல என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் திரு. முத்தரசன் தெரிவித்துள்ளார்.*

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தல் பிரச்சாரத்தின் போது அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், த.வெ.க. அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*

*நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை விவகாரத்தில், தற்போதுள்ள 543 தொகுதிகளின் அடிப்படையிலேயே, மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று திரு. முத்தரசன் வலியுறுத்தினார்.*

*>>>>>>><<<<<<<*

*மகளிர் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் தேசிய கைத்தறி தின விழா கொண்டாடப்பட்டது.*

*இந்த நிகழ்ச்சியில் 5 மணி நேரத்தில் ஆயிரம் கைத்தறி ஓவியங்களை வரைந்து மாணவிகள் உலக சாதனை படைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - கண்ணன் 30 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டியுள்ள மாவட்டங்களில் ஓரிரு இடங்களில், இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

தமிழகத்தில் ஏனைய மாவட்டங்களில், ஒருசில இடங்களில், அடுத்த நான்கு தினங்களுக்கு, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் நேற்றிரவு ஒருமணிநேரம் கனமழை பெய்தது.

கடும் வெப்பநிலை இருந்து வந்த நிலையில், இந்த மழை காரணமாக, குளிர்ச்சியான சூழல் நிலவியது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒரு சில பகுதிகளில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

***<u>இருவரிச் செய்திகள்</u>***

யுக்ரைனில் உள்ள *Kyiv* பகுதியில் நேற்று ரஷ்யா நடத்திய டிரோன் தாக்குதலில், ஒரு குழந்தை உட்பட நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

அபுதாபியைச் சேர்ந்த எண்ணெய் நிறுவனத்திற்குச் சொந்தமான கப்பல் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு ஐக்கிய அரபு அமீரகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் இத்தாலியின் முடிவிற்கு எதிராக, எல்லை பகுதியில் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக ஸ்பெயின் அறிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

நாட்டின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தையொட்டி, புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில், இந்திய விமானப் படையின் பேண்ட் இசை நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<

மோசமான வானிலை மற்றும் சீரமைப்புப் பணிகள் காரணமாக, *Baltal*, *Pahalgam* வழியாக, யாத்ரீகர்கள் அமர்நாத் யாத்திரை மேற்கொள்வதற்கு, இன்று முதல் தடை விதிக்கப்படுவதாக ஜம்மு காஷ்மீர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

*Guru Tegh Baahadur-ஜியின் 350-வது ஆண்டு தியாக தினத்தைக் குறிக்கும் வகையில் நவி மும்பையில் நேற்று தேசிய கருத்தரங்கு நடைபெற்றது.*

>>>>>>><<<<<<<

*காஞ்சிபுரம் மாவட்டம், தேனம்பாக்கம் பெரியார் நகரில் உள்ள சமூகநீதி மாணவர் விடுதியில் மாநில அமைச்சர் திரு. சம்பத்குமார் ஆய்வு செய்தார்.*

>>>>>>><<<<<<<

*கோவையில், போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம், மாவட்ட காவல்துறை சார்பில் நடைபெற்றது.*

>>>>>>><<<<<<<

*திருவள்ளூர் மாவட்டத்தில் ஊத்துக்கோட்டை சாலையில் 36 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம் விரைவில் மக்கள் பயப்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது*

>>>>>>><<<<<<<

*ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் கடல்பகுதியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 297 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.*

>>>>>>><<<<<<<

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*உலக இளையோர் Bridge சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Sagnik Roy - Sayantan Kushari இணை சாம்பியன் பட்டம் வென்றது.*

*China-வின் Hefei நகரில் நடைபெற்ற இப்போட்டியில், இந்த இணை 377.67 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.*

>>>>>>><<<<<<<

*ஆசிய இளையோர் பளுதூக்குதல் சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றது.*

*உஸ்பெகிஸ்தானின் Tashkent-ல் நடைபெற்று வரும் ஆடவர் 60 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் Tomochou Meetei தங்கப்பதக்கத்தையும், Gurunaidu Sanapathi வெள்ளிப் பதக்கமும் வென்றனர்.*

>>>>>>><<<<<<<

*கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் Ashmita Chaliha, சீனாவின் Q Han-ஐ எதிர்கொள்கிறார்.*

*தென்கொரியாவில் Asan நகரில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி இன்று காலை மணி 7.30-க்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<<*

*தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் மதுரை - கோவை அணியையும், திருச்சி – சேலம் அணியையும் வென்றன.*

*இன்று நடைபெறும் ஆட்டங்களில், சேப்பாக் அணி - திண்டுக்கல் அணியையும், நெல்லை அணி - திருப்பூர் அணியையும் எதிர்கொள்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*தமிழ்நாடு ஹாக்கி லீக் போட்டி, சென்னையில் இன்று தொடங்குகிறது.*

*இம்மாதம் 12-ம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், தெற்கு ரயில்வே, ஐசிஎஃப், இந்தியன் வங்கி உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்கின்றன.*

*>>>>>>>END<<<<<<<*